2018 மே 31]

அவருக்கு காணிக்கையாக்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

92—

குளங்களைத் தூர் வாருதல்

***4463—திரு. அம்மன் கே. அர்ச்சுணன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் தெற்கு தொகுதி, பெரியகுளம், செல்வ சிந்தாமணி குளம் மற்றும் வாலாங்குளம் ஆகிய குளங்களைத் தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாலாங்குளத்தில் தனியார் தொண்டு நிறுவன பங்களிப்புடன் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது முழுமையாக நீர் நிரம்பியுள்ளது. செல்வ சிந்தாமணி குளம் மற்றும் பெரியகுளம் இரண்டிலும் நீர் நிரம்பியுள்ளது. இந்த மூன்று குளங்களையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபோது 2015 ஆம் ஆண்டிலேயே சீரமைக்க உத்தரவிட்டார். அதன்படி Smart City *திட்டத்தின்கீழ் அவற்றைப் புனரமைக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு தற்போது நடவடிக்கையில் உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த திட்டமென்பதால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் வேகமாக முடிக்கச் சொல்லி உத்தரவிட்டுள்ளார்கள். ஆகவே, இந்தத் திட்டம்*

சிறப்பான முறையிலே நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்கள்.

திரு. அம்மன் கே. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மக்களால் நான், மக்களுக்காகவே நான்” என்று தவ வாழ்வு வாழ்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்ற திசையை நோக்கி வணங்குகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வாரிசாக, அம்மா அவர்களின் நல்லாட்சியை வழி தவறாமல் நடத்திக் கொண்டு வரும் எங்கள் சேலத்து சிங்கம், ஸ்டெர்லைட் ஆலையை மூடிய தங்கம், மாண்புமிகு முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்கி, வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு தோளோடு தோள் நின்று துணை புரிந்த வெள்ளையத் தேவனைப்போல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு துணை நின்று ஆட்சி செய்யும் துணை முதல்வர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். எங்கள் கொங்கு சீமைக்கு எண்ணற்ற திட்டங்களை முதல்வரிடம் கேட்டுப் பெற்றுத் தந்த உள்ளாட்சியில் நல்லாட்சி செய்து வரும் கொங்கு நாட்டின் தளபதி மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரின் நிலத்தடி நீருக்கு ஆதாரமாக உள்ள பெரியகுளம், செல்வசிந்தாமணி குளம், வாலாங்குளம் ஆகிய மூன்று குளங்களையும் தூர்வாரி, அவற்றை ஆழப்படுத்தினால் தென் மேற்கு பருவ மழைக் காலத்தில் மழை நீரை அதிகமாக சேமித்து வைக்க முடியும். எனவே, கோவை மக்களுக்கு நீராதாரமாக விளங்கும் இந்தக் குளங்களைத் தூர்வார ஆவன செய்வாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

2018 மே 31]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபோது, மத்திய அரசு 100 சீர்மிகு நகரங்களை அறிவித்தது. அதிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிட்டத்தட்ட, 12 மாநகராட்சிகளுக்கு 12* Smart City*–யைக் கேட்டுப் பெற்றார்கள். அதிலே, 11 நகரங்களுக்கு இத்திட்டம் தற்போது நடைமுறைக்கு வந்துவிட்டது. அதில் கோயம்புத்தூர் மாநகராட்சியும் வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன குளங்கள் எல்லாம் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்டவை. 2015–2016–ல் அந்தக் குளங்களையெல்லாம் சீரமைக்க அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள். கடந்த முறை, உள்ளாட்சித் துறை பற்றிய விரிவான கூட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் நடத்தும்போதுகூட, அந்தத் திட்டங்களை வேகமாக முடிக்க வேண்டுமென்றும், 2015-2020-க்குள் இந்தத் திட்டங்களையெல்லாம், அதாவது* AMRUT, Smart City *போன்ற திட்டங்களை எல்லாம் முடிக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டுள்ளார்கள். அந்தத் திட்டங்களெல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும்போதே உத்தரவிடப்பட்ட திட்டங்களாகும். மாண்புமிகு அம்மா அவர்கள் எந்தெந்த திட்டங்களை அறிவித்தாரோ, அதையெல்லாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு வேகமாக முடிக்கச் சொல்லியிருக்கிறார்கள். அம்மா அவர்களுடைய அரசு சிறப்பான முறையில் அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. அதிலே முதல் கட்டமாக சீர்மிகு நகரங்கள் அதாவது* Smart City *திட்டத்தின்கீழ் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பெரியகுளம், வாலாங்குளம், செல்வசிந்தாமணி குளம், அரசம்பதிகுளம், கிருஷ்ணாம்பதிகுளம், செல்வமணிகுளம், குமாரசாமி உத்தமகுளம் மற்றும் சிங்களூர்குளம் ஆகிய 8 குளங்களும் அதிலே வருகின்றன. ஆகவே, இந்த 8 குளங்களைப் பொறுத்தவரையிலே, அவர்கள் என்னென்ன கேட்டார்களோ,* walking track, *அங்கு கழிவுநீர் கலக்காமல் இருக்க சுத்திகரிப்பு நிலையம், பொதுமக்கள் என்னென்ன எதிர்பார்க்கின்றார்களோ, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் என்னென்ன எதிர்பார்க்கிறாரோ அவை அனைத்தும் அதில் செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்கள்.

திரு. அம்மன் கே. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாவின் ஆட்சி நடைபெற்று வருவதால், கத்தரி வெயிலில்கூட எங்களது கோவை கொங்கு சீமையிலே மழை அதிகமாக பெய்து, இப்போது குளத்தில் நீர் அதிகமாக உள்ளது. நான் இந்தக் கேள்வியை முன்பே கேட்டிருந்தேன். இருந்தாலும், இன்று கேள்வி வந்ததனால் இந்தக் கேள்விக்கு எங்களுடைய அமைச்சர் நல்லதொரு பதிலைத் தந்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

93—

ஆட்டோ நகர்

***7142—திருமதி பொன். சரஸ்வதி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோட்டில் ஆட்டோ நகர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருச்செங்கோட்டில் ஆட்டோ நகர் அமைக்கும் உச்தேசம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.

திருமதி பொன். சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான் மக்களுக்காகவே நான்' என்று